**கந்தளாய் பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கந்தளாய் பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கந்தளாய் பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 முதல் 2019 ஆண்டு வரை காலத்திற்குரிய மீளாய்வாண்டில் கிடைத்த முத்திரைக் கட்டணம் ரூபா 2,893,351 மீளாய்வாண்டு வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2022 இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்ததாரர் ஒருவருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 913,000 ஆன முற்பணத் தொகை மீளாய்வாண்டில் ஐந்தொகையினுள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 159 பிரிவு | மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 28,792,365 ஆன நிலுவையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்காததுடன் இவற்றில் ரூபா 10,738,556 தொகை 10 ஆண்டுகளிலிருந்து அறவிடப்பட வேண்டியதாக இருந்தது. | நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி கோவை | | | |
| | (i) 33 ஆம் விதி | ரூபா 11,659,457 ஆன வீதவரியை புறக்கணித்த நபர்கள் தொடர்பான பட்டியலொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவேடொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | பிரதேச சபை விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) 218 ஆம் விதி | கிரயம் ரூபா 160,890,599 ஆன அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் 05 ஆண்டுகளுக்கு அதிக காலமாக வருடாந்தம் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காத்தில் கணிப்பீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பிரதேச சபை விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 2 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 1,384,887 ஆன 2 நிறுத்தல் வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | திறைசேரி செயலாளரின் 2021/09/29 ஆம் திகதிய PFD/PMD/Cir/2021/01 கொண்ட அரச நிதி சுற்றறிக்கை. | சமுதாய அடிப்படை அமைப்புகளுக்கு நேரடி ஒப்பந்தம் வழங்கும் போது நிறுவன தலைவர் மற்றும் மூவர் கொண்ட குழுவொன்று மூலம் தகைமையை உறுதி செய்யாது 05 சந்தர்ப்பங்களில் ரூபா 7,137,038 பெறுமதியான 05 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. | சமுதாய அபிவிருத்தி அலுவலரின் பரிந்துரை மீது உரிய ஒப்பந்தங்களை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,574,147 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,765,379 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

**வருமானத்தை சேகரிப்பதற்கான செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்**<br>மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 11,659,457 ஆன வீதவரியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்காததுடன் சபையின் வருமானப் பிரிவின் செயற்திறமையின்மை இதற்கு நேரடியாகத் தாக்கம் செலத்தியிருந்தது.<br><br>**(ஆ) வாடகை**<br>மீளாய்வாண்டில் வருடாந்த வாடகை ரூபா 2,452,132 ஆன கடையறைகளை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக 32 குத்தகைகாரர்களுடன் முறையாக உடன்படிக்கை கைச்சாதிட்டிருக்காததுடன் மீளாய்வாண்டு இறுதியில் அவர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 4,377,705 ஆன நிலுவை வாடகையை அறவிடவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை தொகையை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(இ) அனுமதிப்பத்திர கட்டணம்**<br>2000 இன் 53 மற்றும் 1998 இன் 56 ஆம் கொண்ட சட்டங்களினால் திருத்திய 1980 இன் 47 கொண்ட தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 129 கைத்தொழில்களில் 45 கைத்தொழில்களுக்காக அனுமதிப்பத்திரங்கள் பெற்றிருந்தமை காரணத்தால் அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் பரிசோதனை கட்டணமாக சபைக்கு அறவிட இயலுமாக இருந்த ரூபா 588,000 தொகை இழக்கப்பட்டிருந்ததுடன் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாத 84 கைத்தொழில்களுக்காக மீளாய்வாண்டினுள் வியாபார அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளுமாறு நுகர்வோரை அறிவூட்ட திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | சுற்றாடல் அனுமதிபத்திரம் பெற வேண்டிய கைத்தொழிலகளை காலரீதியாக இனங்கண்டு சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ள வேண்டிய ஒழுங்களை மேற்கொள்ள வேண்டும். |

## 3. செயற்றாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வாண்டு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 295,500 பெறுமதியான 09 புபே செட்கள் மீளாய்வாண்டு இறுதி வரையும் விளைவற்று நிலவியது உறுதியானது. | உரிய அங்கத்தவர்களின் தாமதம் இதற்கு காரணமாகவுள்ளது. | கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

### 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 ஆண்டுகளிற்கும் அதிக காலமாக நிலவி வரும் 03 பதவிகளில் 04 அலுவலர்களின் வெற்றிடங்கள் காரணமாக முறையான செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரரித்தல், மக்கள் முறைபாடுகளுக்கு முறையான நடவடிக்கை எடுத்தல், வாகனங்கள் தொடர்பாக முறையான பதிவேடுகள் மற்றும் ஓட்ட குறிப்பு பேணிச் செல்லல் போன்ற சபைனால் பொது மக்களின் நலன்புரிக்காக எடுக்க வேண்டிய பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை. | குறித்த நியமன அதிகாரி இது வரை ஆட்சேர்ப்பு செய்யவில்லை. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 வாகனத் தொகுதியின் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் வாகனங்கள் நிருவன வளவிலிருந்து வெளியில் செல்லும் போது மற்றும் வெளியிலிருந்து மீண்டும் நிறுவனத்திற்கு வரும் போது குறித்த வாகனம் பயணம் செய்யும் இடம், பயண விடயம், மைலோ மீட்டர், யாருடன் பிரயாணம் செய்வது போன்ற விபரங்கள் தொடர்பாக உளைவாயில் அறிக்கை பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டியதுடன் வாகன கட்டுப்பாட்டிற்கு உரிய ஆவணங்கள் மற்றும் அட்டவணைகள் பேணப்பட வேண்டும். |

4. **கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 20 செலவு விடயங்களிற்காக வழங்கியிருந்த ஏற்பாடு ரூபா 74,198,615 தொகை எஞ்சியிருந்ததுடன் அது மதிப்பீட்டு ஏற்பாட்டு பெறுமதியின் 50 சதவீதம் முதல் 98 சதவீத வீச்சளவிலானது. அவ்வாறே இன்னும் 19 செலவு விடயங்களில் மொத்த ஏற்பாடு ரூபா 12,475,250 தொகை எஞ்சியிருந்தது. | நிலவிய தொற்று நிலைமையின் முன் எதிர்பார்த்த ஏற்பாட்டை முழுமையாக செலவிட முடியாது போனதாக அறிவிக்கிறேன். | வருடாந்த பாதீட்டை முறையான கட்டுப்பாட்டு சாதனமாக பயன்படுத்த வேண்டும். |